# கேரளப் பாடநூல்

# தமிழ்

**வகுப்பு I**

**பகுதி 1**

Kerala Reader - Tamil
Standard I
Part - 1

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

ST-339-1-TAMIL-1-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன், அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 1

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

# முகவுரை

மக்களின் வாழ்க்கை முறைகளும் வாழ்க்கைச் சூழல்களும் காலந்தோறும் மாறும் தன்மையன. அறிவியலின், தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி உலகையே புரட்டிப் போட்டுவிட்டது என்று சொல்லலாம். எல்லா நிலைகளிலும் மாற்றங்கள். கற்றல் – கற்பித்தல் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.கற்றல் என்பது கிடைக்கின்ற அறிவையெல்லாம் சேகரித்து வைப்பது அல்ல. கற்ற கல்வி தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. சூழல்களையும் சவால்களையும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு தக்கபடியான பாடங்களைத் தேர்ந்தெடுப்பதும் ஒரு சவால்தான். தேர்ந்தெடுத்த பாடங்களை வகுப்பிற்குத் தகுந்தவாறு அறிமுகம் செய்வதிலும் மிகுந்த கவனம் தேவைப்படுகிறது.

ஆரம்ப வகுப்புகளைப் பொறுத்த வரையில் படங்களுக்கும் பாடங்களைப் போலவே முக்கிய பங்கு உண்டு. பாடம் பாதி, படம் பாதி! கற்பித்தல் என்பது ஒரு பக்கத்திலிருந்து நிகழ வேண்டிய ஒன்றல்ல. கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிகழும் ஒரு கலந்துரையாடலைத் தான் இப்போது கற்றல் என்கிறோம். கற்போரின் மூளைக்குள் அறிவைத் திணித்தல் என்பதற்கு மாறாக அவர்கள் தாமாக சிந்தித்து அறிவை வளர்த்துக் கொள்வதற்கான துண்டுகோலாகவும் கற்றல் முறை அமைய வேண்டும்.

ஒன்றாம் வகுப்பு என்பதால் மொழி, கணிதம், சுற்றுச்சூழல் கல்வி மூன்றையும் ஒருங்கிணைத்து வழங்க வேண்டிய ஒரு கட்டாயமும் உள்ளது. பாடங்களைப் பரிமாற்றம் செய்வதில் ஆசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

படியுங்கள்! பயன்பெறுங்கள்.

முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - I (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Srinivasan, S.P.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Expert

**Dharmesh Fernandez**
Professor cum Deputy Director of CIIL, Mysuru.

### Members

**Alli Pathumma, K.,** HSST (Tamil), GHSS, Kumily, Idukki.

**Babu, S.,** (Rtd.) H.M., GLPS, Devikulam, Idukki.

**Heleena, K.,** LPST, GTHS, Vanchivayal, Idukki.

**Jonny Mon, R.R.,** LPST, LMS Tamil HS, Parasala,Thiruvananthanpuram.

**Krishnamoorthy, M.,** BPC, Chittur BRC, Palakkad.

**Muniyandi,** (Rtd.) PD Teacher, TCNMGHSS, Nedumpara, Kollam.

**Sofia Stephen,** LPST, GLPS, Glenmery, Idukki.

**Aprna Giri, R.,** Chackai, Thiruvananthapuram.

**Arya S Rajeev.,** Kariyam, Poudikonam, Thiruvananthapuram.

**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.

### Academic Co - Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

1. கைகொடுப்போம்

பட்டம் விடுவோம் ........ 8

பகிர்ந்து உண்போம் ........ 12

கூடி விளையாடு ........ 16

2. வண்ணங்களின் கொண்டாட்டம்

திருவிழா ........ 22

கரகாட்டம் ........ 26

புத்தம் புது வீடு ........ 30

3. ஆகா! என்ன அழகு

பூந்தோட்டம் ........ 36

வெள்ளைப் பசுவின் தோட்டம் ........ 40

புள்ளிக் கன்று ........ 44

4. என்றும் நலமுடன்

நித்தம் வேண்டும் சுத்தம் ........ 50

சுத்தம் சுகம் தரும் ........ 54

காட்டிலே சந்தை ........ 58

5. பயணம் இனிது

வாகனங்கள் பலவிதம் ........ 64

தலைக்கவசம் உயிர்க்கவசம் ........ 68

வாருங்கள் போகலாம் ........ 72

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## என்னைப்பற்றி .............

பெயர் : ..........................................................................

அம்மா பெயர் : ..........................................................................

அப்பா பெயர் : ..........................................................................

குடும்ப உறுப்பினர்கள்

........................ ........................ ........................

## அலகு – 1

# கை கொடுப்போம்

## பட்டம் விடுவோம்

ஆனந்தியின் அப்பா பட்டம் செய்தார். பலதரப்பட்ட பட்டங்கள்! அதை ஆனந்திக்குக் கொடுத்தார். ஆனந்தி தன் தங்கை பாப்பாவுக்கும் நண்பர்களுக்கும் கொடுத்தாள். அனைவரையும் பட்டம் விட அழைத்தாள்.



பட்டம் விடுவோம் பட்டம் விடுவோம்
    பாப்பா ஓடி வா
பாடிப்பாடி பட்டம் விடுவோம்
    பாப்பா ஓடி வா
வண்ண வண்ண பட்டம் விடுவோம்
    பாப்பா ஓடி வா
சேர்ந்து கூடி பட்டம் விடுவோம்
    பாப்பா ஓடி வா!



ST-339-2-TAMIL-1-VOL-1


## கீழ் வரும் சொற்களைப் பாடப்பகுதியில் வட்டமிடுங்கள்.

- பட்டம்
- பாப்பா
- வா


## கீழ் வரும் சொற்கள் பாடலில் எத்தனை முறை வந்துள்ளன? கூறுங்கள்.

- பட்டம்
- பாப்பா
- வா


## பெயரைச் சொல்வேன்


பட்டம்


பந்து


பம்பரம்

## வாருங்கள் என்னுடன்.



## கீழ்க்காணும் சொற்களில் நிறமிட்ட எழுத்தை வாசிப்போம்.

ப ட் ட ம்     ப ட ம்     வ ட ம்

## சொல்லிப் பழகுவோம்.




| | | | | |
|---|---|---|---|---|
| ப | – | பா | | ப் |
| ட | – | டா | – | ட் |
| ம | – | மா | – | ம் |
| வ | – | வா | – | வ் |

## வாசிப்போம்

படம்     பாடம்     மடம்     மாடம்

பப்படம்     பாப்பா     மாமா

## வண்ணம் தீட்டுவோம். பெயர் எழுதுவோம்.



| | | | |
|---|---|---|---|
| | | | |

# பகிர்ந்து உண்போம்

அனைவரும் மகிழ்ச்சியோடு பட்டம் விட்டனர்.
ஆபேலின் பட்டம் மரத்தில் சிக்கியது. ஆமினா மரத்தை நோக்கி வந்தாள். கீ! கீ! கீ! எங்கிருந்து சத்தம் வருகிறது? சுற்றும் முற்றும் பார்த்தாள்.



1




2




3




4




5




6




7




8

குருவி எல்லா குஞ்சுகளுக்கும் உணவைப் பகிர்ந்தளித்தது.


**நடிப்போம்.**

- கதை நிகழ்வுகளைக் கதாபாத்திரங்களாக மாறி நடிப்போம்.
- பாடப்பகுதியில் குருவிக்குஞ்சுகள் அம்மா என்று எத்தனை முறை அழைக்கின்றன?
- அம்மா என்ற சொல்லை வட்டமிடுங்கள், வாசியுங்கள்.

**வண்ணமிட்ட எழுத்தை வாசியுங்கள்.**

அ ம் மா


**வாருங்கள் என்னுடன்.**



'அ' வில் தொடங்கும் பெயரைச் சொல்வேன்.










வாசிப்போம்





விடுபட்ட எழுத்துகளை எழுதுவோம்.

___ம்மா,

___ப்பா,

பப்ப___ம்.



## கூடி விளையாடு

ஆமினா பட்டத்தை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். அப்போது திடீரென காற்று வீசியது. மரத்திலிருந்து பட்டம் கீழே விழுந்தது. ஆமினா ஓடிச் சென்று பட்டத்தை எடுத்தாள். அடடா... கிழிந்து விட்டதே!



"ஐயோ! என் பட்டம்"

ஆபேல் அழுதான்.

"ஆபேல் அழாதே! என் பட்டத்தை வைத்துக்கொள்"

ஆமினா தனது பட்டத்தைக் கொடுத்தாள்

ஆபேல் மகிழ்ந்தான்.

"ஆமினா உனக்குப் பட்டம் இல்லையா?"

"இதோ என் பட்டத்தை எடுத்துக்கொள்."

ஆனந்தி தனது பட்டத்தைக் கொடுத்தாள்

"அப்படி என்றால் உனக்குப் பட்டம்?" ஆபேல் கேட்டான்.

"என் அப்பா செய்து தருவார்." ஆனந்தி கூறினாள்.

அனைவரும் மகிழ்ந்தனர். விட்டுக் கொடுத்தால்

மகிழ்ச்சி தானே!



- ஆ என்ற எழுத்தில் தொடங்கும் பெயர்களைக் கூற முடியுமா?
- ஆ என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களை / பெயர்களை வட்டமிடுங்கள்.

**படத்தைப் பார்த்து பெயரைச் சொல்லுங்கள்.**







**விடுபட்ட எழுத்தை நிரப்புங்கள்.**







..........டு ..........மை ..........ந்தை ..........ணி

**வாசிப்போம்**



## கூறுங்கள்

- நண்பர்களுடன் சேர்ந்து நீங்கள் விளையாடுவதுண்டா?
- நீங்கள் விளையாடும் விளையாட்டுகளின் பெயர்களைக் கூறுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த விளையாட்டு எது? ஏன்?

## எத்தனை எத்தனை விளையாட்டுகள்!

- படங்களைப் பார்த்து நாட்டுப்புற விளையாட்டுகளுக்கு (✓) அடையாளமும் நவீன விளையாட்டுகளுக்கு (✗) அடையாளமும் வரைந்து வகைப்படுத்தவும்.














## கதை நேரம்.

படத்தைப் பார்த்துக் கதை கூறுங்கள்.

### ஆமையும் முயலும்



**பாடி மகிழ...**

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

– பாரதியார்.

**படத்தொகுப்பு தயாரிப்போம்.**

❖ பல விதமான விளையாட்டுகளின் படங்கள் சேகரித்து ஒட்டவும்.

அலகு – 2

# வண்ணங்களின் கொண்டாட்டம்

## திருவிழா

தமிழரசி குடும்பத்தினருடன் ஊர்த்திருவிழா காணச் சென்றாள். ஊர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. தமிழரசி திருவிழா காட்சிகளைக் கண்டு ரசித்தாள்.



அழகான திருவிழா
ஆரவாரத் திருவிழா
இன்பமானத் திருவிழா
இரவும் பகலும் கலைவிழா!

தங்கம் போல மின்னுதே
தச்சன் செய்த சப்பரம்
சங்கு சக்கரம் மாட்டியே
இங்கும் அங்கும் உருளுதே!

பஞ்சு மிட்டாய் கடையிலே
பாலகர்கள் கூட்டமாம்
மஞ்சள் நிற ஒளியிலே
எங்கும் எழில் கோலமாம்!




**உரையாடுங்கள்.**

நீங்கள் பார்த்த திருவிழா பற்றி கூறுங்கள்.

**படத்தைப் பார்த்து பெயர் கூறுங்கள்.**


சங்கு


சக்கரம்


சப்பரம்

**பாடலுக்கு மெட்டமைப்போம் பாடுவோம்.**

- திருவிழாப் பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

**உரையாடுங்கள்.**


- நீங்கள் திருவிழா பார்த்ததுண்டா?
- திருவிழாவில் நீங்கள் என்னென்ன பார்த்தீர்கள்?
- திருவிழாவில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

**தரப்பட்டுள்ள சொற்களைப் பாடப்பகுதியில் வட்டமிட்டுங்கள்.**


சக்கரம், சப்பரம், தங்கம், தச்சன்,

பஞ்சு, மஞ்சள், இரவு

**முதல் எழுத்தை வட்டமிடுங்கள். வாசியுங்கள்.**

-  சங்கு     தவளை
-  கப்பல்     இலை
-  ரம்பம்     கண்


புள்ளிகளை இணைப்போம்; வாசிப்போம்.



வாசிப்போம். எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| ச | சா | ச் |
| க | கா | க் |
| த | தா | த் |
| ர | ரா | ர் |

இணைப்போம் வாசிப்போம்; எழுதுவோம்.



# கரகாட்டம்

ஒலி பெருக்கி அறிவிப்பு: கரகாட்டம் ஆரம்பித்துவிட்டது. அனைவரும் கண்டு மகிழ வாருங்கள்.

எல்லோரும் ஆர்வத்தோடு கரகாட்டம் பார்க்கச் சென்றனர்.



கரகாட்டம் ஆரம்பித்தது,

அலங்காரம் செய்த பெண்.

தலையில் கரகத்துடன் ஆடினாள்.

கரகத்தின் மேல் கிளி பொம்மை.

ஆட்டத்திற்கேற்ப கிளியும் ஆடியது.

அனைவரும்  கண்டு இரசித்தனர்.



## உரையாடுங்கள்.

- நீங்கள் கரகாட்டம் பார்த்ததுண்டா?
- உங்களுக்குத் தெரிந்த கலை நிகழ்ச்சிகள் எவையெல்லாம்?
- திருவிழாவில் நீங்கள் கண்ட கலை நிகழ்ச்சிகள் எவை?
- திருவிழாவில் என்னென்ன இசைக் கருவிகள் பயன்படுத்துவார்கள்?

## இசைக் கருவிகள் அறிவோம்.

படங்களைச் சேகரித்து விடுபட்ட இடத்தில் ஒட்டுங்கள்.

செண்டை



நாதஸ்வரம்

புல்லாங்குழல்



மத்தளம்

கித்தார்



வயலின்

## கீழேயுள்ள சொற்களைப் பாடப்பகுதியில் வட்டமிடுங்கள்.

கரகம், கிளி, பொம்மை, அலங்காரம்

## பலூன் கிலுகிலுப்பை செய்வோம்.

தேவையான பொருட்கள் :– பலூன், கடுகு, ஈர்க்கில், நூல்

பலூன் ஊதும் முன் சிறிது கடுகினைப் பலூனுள் போடவும். அதன்பின் பலூனை ஊதி நூலை வைத்து காற்று போகாதவாறு கட்டி வைக்கவும். பின் பலூனை ஈர்க்கிலுடன் சேர்த்துக் கட்டி வைத்து கிலுக்கினால் பலூன் கிலுகிலுப்பை தயார்.

## பெயரைக் கூறுங்கள்.

படங்களைப் பார்த்து பெயரைக் கூறுங்கள்.

## 'ஈ' என்ற எழுத்து வரும் சொற்களை அடிக்கோடிடுங்கள்.

ஈச்சம் பழத்தைச் சுற்றிலும்

ஈக்கள் பறந்து மொய்க்குது

ஈயால் நோய்கள் பரவிடும்

ஈயைத் தூர ஓட்டுவேன்.

## ஒலித் துணை குறியீடுகளை அடையாளம் கண்டு வாசிப்போம்!


| ி | ெ_ா | ை_ |
|---|---|---|
| பி | பொ | பை |
| கி | கொ | கை |
| மி | மொ | மை |
| வி | வொ | வை |
| தி | தொ | தை |
| டி | டொ | டை |
| | | |
| | | |

## வாசிப்போம்.

மொட்டை, வடை, தொடை, விடை, திட்டம், அடி, ஆடி, இடி, ஈட்டி, ஈச்சமரம்

# புத்தம் புது வீடு

திருவிழா மகிழ்வாய் நிறைவுற்றது. மறுநாள் தமிழரசியின் புது வீட்டிற்குப் புதுமனைப் புகுவிழா. தமிழரசி ஆவலோடு காத்திருந்தாள். நண்பர்கள் வரத் தொடங்கினர்.







சுபைதா பாயசம் குடி!
அத்தை! பாயசம் நல்லா இருக்கு


நாங்கள் போய் வருகிறோம் நன்றி.
ரொம்ப மகிழ்ச்சி


## உரையாடுங்கள்

- உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வருவதுண்டா?
- விருந்தினர்கள் எப்பொழுதெல்லாம் வருவார்கள்?
- உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர்கள் யாரெல்லாம்?

## தரப்பட்டுள்ள சொற்களைப் பாடப்பகுதியில் வட்டமிடுங்கள்

- வீடு, பாயசம்

## சொல்லிப் பழகுவோம்.





## வாசிப்போம்


- வீடு, வீதி, வீசி, பாய், காய்

## வாசிக்கிறேன்... கேளுங்க...


அம்மா அம்மா வா வா வா
பாட்டுப் பாடி தா தா தா
பாப்பா பாப்பா வா வா வா
ஆட்டம் ஆட வா வா வா

**சொற்களை உருவாக்குவோம்; வாசிப்போம்.**




**படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.**



ST-339-5-TAMIL-1-VOL-1

# கதை நேரம்

குரங்கும் குல்லா வியாபாரியும்



1



2



3



4



5



6

## யானை

டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்

கோவில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள் (டிங் டாங்... )

மணியை ஆட்டி வருகுது
வழியை விட்டு நில்லுங்கள் (டிங் டாங்... )

ஆடி ஆடி வருகுது
அந்தப் பக்கம் செல்லுங்கள் (டிங் டாங்... )

ஊரைச் சுற்றி வருகுது
ஓரமாக நில்லுங்கள் (டிங் டாங்... )

கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள் (டிங் டாங்... )

குழந்தைகளே பாருங்கள்
குதித்து ஓடி வாருங்கள் (டிங் டாங்... )

– குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

# ஆகா! என்ன அழகு

## பூந்தோட்டம்

இரண்டு பூனைக்குட்டிகள், சிண்டு, மண்டு. அவை பூந்தோட்டத்தில் விளையாடத் தொடங்கின. பூந்தோட்டத்தில் பல வகையான பூக்கள். பூக்களில் பட்டாம்பூச்சிகள். பட்டாம்பூச்சியைப் பார்த்த சிண்டுவும் மண்டுவும் அதன் பின்னே சென்றன. ஓடியாடி விளையாடின.



பட்டாம்பூச்சி பட்டாம்பூச்சி
பக்கம் வந்திடு ! – உன்
பட்டுப் போன்ற சிறகை நானும்
தொட்டுப் பார்க்கிறேன் !

வண்ண வண்ணப் பூக்களிலே
வந்து அமர்ந்திடு – நல்ல
வாசம் வீசும் பூவின் தேனை
உண்டு மகிழ்ந்திடு !


பல நிறத்தில் பூக்களிங்கே
பூத்துக் குலுங்குதே – மெல்ல
வீசும் காற்றில் தலையை
ஆட்டி மகிழுதே !

சிறகு முளைத்த பூவெனவே
நீயும் பறக்கிறாய் – உன்
அழகைக் கண்டு பூக்களுமே
வெட்கம் கொள்ளுதே !




**பாடப்பகுதியிலிருந்து கீழ்வரும் சொற்களை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.**

- பட்டு, தொட்டு, பட்டாம்பூச்சி, பூ, உண்டு, கண்டு




**முதலெழுத்தை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.**

- உண்டு, பூச்சி



**கடைசி எழுத்தை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.**

- பட்டு, சிட்டு



**'உ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூறுங்கள்.**

**'பூ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூறுங்கள்.**

**உங்களால் எத்தனை பூக்களின் பெயர்களைக் கூற முடியும்?**

.............................................................................


.............................................................................

**வகைப்படுத்துவோம்.**

- நிறங்களின் அடிப்படையில் பூக்களை வகைப்படுத்துங்கள்.

| ● சிவப்பு | ○ வெள்ளை | ● மஞ்சள் | ● நீலம் |
|---|---|---|---|
| | | | |

**வண்ணம் தீட்டுவோம்.**





**இணைப்போம்; வாசிப்போம்; எழுதுவோம்.**

க
த
ப
சி
வி

← ட்டு

**இணைப்போம்; வாசிப்போம்; எழுதுவோம்.**

க
ஆ
வ
த
பூ

← ண்டு

**கூறுங்கள்.**

- பாடப்பகுதியிலுள்ள படத்தைப் பாருங்கள். என்னென்ன பார்த்தீர்கள்?
- உங்களுக்குப் பிடித்த பூ எது? ஏன்?
- பூக்களில் தேன் குடிக்க வருபவை எவை?
- பூக்களே இல்லையென்றால் என்ன நிகழும்?

# வெள்ளைப் பசுவின் தோட்டம்

தாய்ப்பூனை பிள்ளைகளிடம் பால் வாங்கி வருமாறு கூறியது. சிண்டுவும் மண்டுவும் பசுவிடம் பால் வாங்க வந்தன. வெள்ளைப் பசுவின் தோட்டத்தில் விதவிதமான காய்கறிகள். அவை காய்கறித் தோட்டத்தை வேடிக்கை பார்த்தன.





வெள்ளைப் பசுவின் தோட்டத்தில்
விதம் விதமாய்க் காய்கறிகள்
ஊதா நிறத்தில் கத்திரிக்காய்
பந்தல் நிறையப் புடலங்காய்
சிவப்பு நிறத்தில் தக்காளி
பந்து வடிவில் பூசணிக்காய்
மஞ்சள் நிறத்தில் மாம்பழங்கள்
மரத்தில் பழுத்துத் தொங்கின.

பழுத்த பலாவின் மணம்
தோட்டம் எங்கும் பரவியது.
காய்கறிகளைப் பறிக்க
சிண்டுவும் மண்டுவும்
வெள்ளைப் பசுவிற்கு உதவின.

ST-339-6-TAMIL-1-VOL-1

**வட்டமிடுங்கள்.**

பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து வட்டமிடுங்கள்.

- காய்கறிகளின் பெயர்கள்.
- பழங்களின் பெயர்கள்.
- ஊதா என்ற சொல்.

**சொல்லுங்கள்.**

- உங்களுக்கு எத்தனை காய்கறிகளின் பெயர்கள் தெரியும்?
- உங்களுக்கு எத்தனை பழங்களின் பெயர்கள் தெரியும்?
- உங்களுக்குப் பிடித்த காய்கறி எது? ஏன்?
- உங்களுக்குப் பிடித்த பழம் எது? ஏன்?


**உற்றுக் கவனிப்போம். வகைப்படுத்துவோம்.**

வீட்டுத் தோட்டத்தில் / பள்ளித் தோட்டத்தில் உள்ள காய்கறிகளை உற்றுக் கவனித்து வகைப்படுத்துங்கள்.

| செடியில் விளைபவை | கொடியில் விளைபவை |
| --- | --- |
| ❖ வெண்டைக் காய் | ❖ கோவைக் காய் |

**பெயரைச் சொல்லுங்கள்.**





## அடிக்கோடிடுங்கள்.

'ஊ' என்ற எழுத்தை அடிக்கோடிடுங்கள். எத்தனை முறை வந்துள்ளது? கூறுங்கள்.

ஊதும் குழலை வாங்கித் தந்து

ஊது ஊது என்றாங்க!

ஓடும் வண்டியில் ஊதிப்பார்த்தேன்

ஊதாதே என்று சொன்னாங்க!

ஊ

## முதல் எழுத்தை வட்டமிட்டுங்கள். வாசியுங்கள்.

❖ ஊர், ஊமை, ஊசி

## பட்டியலிடுவோம்.

மரத்தை நம்பி வாழும் உயிரினங்களைக் கண்டுபிடியுங்கள். பட்டியலிடுங்கள்.

......................................

......................................

......................................

......................................

## எத்தனை எத்தனை மரங்கள்.

உங்களுக்கு எத்தனை மரங்களின் பெயர்கள் தெரியும்? பயன்களின் அடிப்படையில் அம்மரங்களை வகைப்படுத்துங்கள்.

| பழம் தரும் மரங்கள் | பிற பயன்தரும் மரங்கள் |
|---|---|
| | |

# புள்ளிக் கன்று

பால் வாங்கி வந்த சிண்டு மண்டுவோடு வெள்ளைப்பசுவும் வந்தது. பூனைக் குடும்பத்தைத் தன் கன்றுக்குட்டியின் பெயர் சூட்டு விழாவிற்கு வருமாறு அழைத்தது. மறுநாள் வெள்ளைப் பசுவின் கன்றுக்குப் பெயர் சூட்டும் விழா. விருந்தினர் பலரும் வந்தனர்.



வெள்ளைப் பசுவின் வீட்டில்
கன்றுக் குட்டிக்குப் பெயர் சூட்டும் விழா!
விருந்தினர் வந்தனர். வந்தோரை
வெள்ளைப் பசு வரவேற்றது.

பூனை வந்தது, பூச்சரம் தந்தது
நாய் வந்தது, நாவல் பழம் தந்தது.
சேவல் வந்தது, நெல் தந்தது.
கோழி வந்தது, கோதுமை தந்தது.

ஆடு வந்தது, ஆரஞ்சு தந்தது.
குதிரை வந்தது, கொள்ளு தந்தது.
கழுதை வந்தது, கரும்பு தந்தது.
கன்றுக் குட்டி மகிழ்ந்தது.

என் கன்றுக் குட்டியின் பெயர்......
'புள்ளிக் கன்று' பசு சொன்னது.
நல்ல பெயர்.... அனைத்தும் வாழ்த்தின.
புள்ளிக் கன்று துள்ளிக் குதித்தது.



**வட்டமிடுங்கள்.**

- பாடப்பகுதியிலுள்ள விலங்குகளின் பெயர்களை வட்டமிடுங்கள்.

**சொல்லுங்கள்.**

- உங்களுக்கு எத்தனை விலங்குகளின் பெயர்கள் தெரியும்?
- உங்களுக்குப் பிடித்த பறவை / விலங்கு எது? ஏன்?
- உங்கள் வீட்டில் வளர்க்கும் விலங்குகள் எவை?

**வகைப்படுத்துங்கள்.**

விலங்குகளை வீட்டில் வளர்ப்பவை, காட்டில் வாழ்பவை என்ற முறையில் வகைப்படுத்துங்கள்.

| வீட்டில் வளர்ப்பவை | காட்டில் வாழ்பவை |
|---|---|
| | |

**படத்தைப் பாருங்கள்; பெயர் சொல்லுங்கள்.**

கோ


















சே

**கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடியுங்கள்.**

- வெள்ளை, பூனை, குதிரை, கழுதை

**முதலெழுத்தை வட்டமிடுங்கள்; வாசியுங்கள்.**

 பென்சில்

 பெட்டி

பெ

 செருப்பு

 செண்டை

செ

**வீட்டில் வளர்க்கும் உயிரினங்களின் பயன்களை எழுதுங்கள்.**


- கோழி ⟶ முட்டை, இறைச்சி
- வாத்து ⟶ ..........
- .......... ⟶ ..........
- .......... ⟶ ..........
- .......... ⟶ ..........
- .......... ⟶ ..........

கதை நேரம்...


## தாகம் தணிந்த காகம்




1




2




3



4



5



6

### பாடி மகிழ...

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி

அம்மா என்குது,
வெள்ளைப்பசு – உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப்பசு – பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு – மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி

– கவிமணி தேசிக விநாயகம்

### வாசிக்கிறேன்... கேளுங்க.

1. உண்டு உண்டு பூ உண்டு
   வண்டு வண்டு பூ வண்டு

2. அம்மா பப்படம் தா தா
   தாத்தா வடை தா தா

3. பாட்டு பாடு தம்பி
   ஆட்டம் ஆடு அக்கா

4. தட்டு தட்டு கை தட்டு
   தாத்தா பாட்டி கை தட்டு

அலகு 4

# என்றும் நலமுடன்

## நித்தம் வேண்டும் சுத்தம்

காட்டுச் சோலையிலுள்ள அருவியில் குளிப்பதற்காக டிங்குவும் பிங்குவும் ஓடின. அவை அருவியில் தனது தாய் மங்குக் கரடி சொல்லிக் கொடுத்த பாட்டைப் பாடிக் கொண்டே குளித்து மகிழ்ந்தன.



என்றும் நலமாய் வாழ்ந்திடவே
எழுவோம் தினமும் காலையில்!
சுத்த நீரில் குளித்திடுவோம்
சுகமாய் நாளும் வாழ்ந்திடுவோம்!

பல்லை நன்றாய்த் துலக்கிடுவோம்
சொல்லை இனிதாய்ப் பேசிடுவோம்!
பளபள மின்னும் ஆடையினைப்
பாங்காய் நிதமும் அணிந்திடுவோம்!



























சுத்தம் நமக்குச் சுகந்தருமே
நித்தம் தொடர நலந்தருமே!
நாளும் உடலைப் பேணிடுவோம்
நலமாய் என்றும் வாழ்ந்திடுவோம்!



## யார் சிறந்தவர்?

❖ அட்டவணையை அலசி ஆராய்ந்து சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதில் யார் சிறந்தவர் என்று கண்டுபிடியுங்கள்.

கடைப்பிடித்தவர் –  ✓ கடைப்பிடிக்காதவர் – 

| எண் | செயல் | ராமன் | சோமன் | கோபன் | நான் ✓, × |
|---|---|---|---|---|---|
| 1 | அதிகாலையில் எழுதல். |  |  |  | |
| 2 | காலையும் இரவும் பல்துலக்குதல். |  |  |  | |
| 3 | தினமும் குளித்தல். |  |  |  | |
| 4 | நகத்தை வெட்டி சுத்தமாக வைத்தல். |  |  |  | |
| 5 | கொதிக்க வைத்த ஆறிய நீரை மட்டும் குடித்தல். |  |  |  | |
| 6 | கழிப்பறைக்குச் சென்ற பின்பு சோப்பு போட்டு கையைக் கழுவுதல். |  |  |  | |
| 7 | சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கையைக் கழுவுதல். |  |  |  | |
| 8 | சுத்தமான ஆடையை அணிதல். |  |  |  | |
| 9 | சத்தான உணவை விரும்பிச் சாப்பிடுதல். |  |  |  | |
| 10 | வளர்ப்பு விலங்குகளுடன் தொட்டுப் பழகிய பின் கையைக் கழுவுதல். |  |  |  | |

## கூறுங்கள்.

❖ ராமன் மேலும் என்னென்ன சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்?

❖ கோபன் கடைப்பிடிக்காத சுகாதாரப் பழக்கங்கள் எவை?

❖ சோமன் கடைப்பிடிக்காத பழக்கங்கள் எவை? அட்டவணையிலிருந்து கண்டுபிடியுங்கள்.

### ஒத்த ஓசையுடைய சொற்கள்.

பாடப்பகுதியிலிருந்து ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- பல்லை – சொல்லை
- _____ – _______
- _____ – _______
- _____ – _______

### முதல் எழுத்தை மாற்றினால்.

- பால் → ____ , ____ (கா, வா)
- காலை → ____ , ____ (மா, ஆ)
- ஏடு → ____ , ____ (ஆ, நா)

### வேறுபாடு அறிந்து வாசிப்போம்.

- பல்லி – பள்ளி
- காலை – காளை
- வெல்லம் – வெள்ளம்

### பொருத்தமானதை எடுத்து எழுதுவோம்.

[ பளபள, சலசல, கலகல, தளதள ]

- .................. என்று மின்னியது பல்.
- .................. என்று சிரித்தாள்.
- .................. என்று ஒழுகியது அருவி.
- .................. என்று மரம் வளர்ந்தது.

### செய்து பாருங்கள்.

ஒரு வாளியில் சுத்தமான தண்ணீர் எடுக்க வேண்டும். குழந்தைகள் வரிசையாக நிற்க வேண்டும். ஒருவர் பின் ஒருவராக வந்து தங்களது கைகளை வாளியில் உள்ள தண்ணீரில் கழுவ வேண்டும். இறுதியில் என்ன நிகழ்ந்தது? கண்டுபிடியுங்கள்.

# சுத்தம் சுகம் தரும்

சில மாதங்களுக்குப் பின்பு காட்டில் வறட்சி ஏற்பட்டது. குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்கவில்லை. எப்பொழுதும் வற்றாத குளத்தை பல விலங்குகளும் அசுத்தப்படுத்தின. தாய் கரடியும் குட்டிகளும் அறிவிப்புப் பலகைகளுடன் குளத்தை அடைந்தன.




குடிநீரில் குளித்து கொண்டிருந்த அப்பு எருமையை மங்குக் கரடி எச்சரித்து விரட்டியது. வாகனம் கழுவ நின்று கொண்டிருந்த பட்டுக் குரங்கும் அவர்களைக் கண்டு பயந்து ஓடியது. மூவரும் அறிவிப்புப் பலகைகளைக் குளக்கரையில் ஊன்றின. குளத்திலிருந்து எட்டிப் பார்த்த குட்டித் தவளையும் வண்ண மீன்களும் மகிழ்ந்தன.









**சொல்லுங்கள்.**

- வீட்டைச் சுத்தமாகப் பாதுகாக்க நீங்கள் என்ன செய்வீர்?
- பள்ளியைச் சுத்தமாக வைத்திருக்க நீங்கள் என்ன செய்வீர்?

**படத்தை உற்றுநோக்கி உயிரினங்களை வகைப்படுத்துங்கள்.**



| தரையில் வாழ்பவை | தண்ணீரில் வாழ்பவை | தரையிலும் தண்ணீரிலும் வாழ்பவை |
|---|---|---|
| | | |

## வட்டமிடுங்கள்.

❖ தரப்பட்டுள்ள சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து வட்டமிடுங்கள்.

| கொட்டாதீர் | குளிக்காதீர் | கழுவாதீர் | குடிநீர் |
|---|---|---|---|

## வாசிப்போம்.


மீன்


சீப்பு


கீரி


இளநீர்

## என்ன செய்ய வேண்டும்?


உடல் உறுதியுடன் நோயின்றி வாழ என்ன செய்ய வேண்டும்? நண்பர்களுடன் கலந்துரையாடி சரியானவற்றிற்கு (✓) அடையாளமும் தவறானவற்றிற்கு (×) அடையாளமும் இடுங்கள்.

- உணவை வாரி வாரி வயிறு முட்ட தின்ன வேண்டாம். ○
- உடற்பயிற்சி செய்ய வேண்டும். ○
- சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டும். ○
- பசித்த பின் உண்ண வேண்டும். ○
- உடல் தூய்மை வேண்டும். ○
- துரித உணவுகள் உடலுக்கு நல்லது. ○
- தூயகாற்றும் தண்ணீரும் உடலுக்குத் தேவை. ○
- சுத்தமான உணவுகள் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. ○

# காட்டிலே சந்தை

தாய்க்கரடி குட்டிக் கரடிகளுக்குச் சத்தான உணவைக் கொடுக்க நினைத்தது. அது காட்டுச் சந்தைக்குப் புறப்பட்டது. குட்டிகளும் தாயுடன் சந்தைக்குச் சென்றன.





காட்டுச் சந்தையில் ஒரே கூட்டம்
குலைகுலையாய் வாழைப் பழங்கள்
கடையின் முன்னே தொங்கின
குவியல் குவியலாகக் காய்கறிகள்
கூடையில் இருந்தன.

கட்டுக் கட்டாய் கீரைகளும்
தட்டுத் தட்டாய் முட்டைகளும்
கடையில் வைக்கப்பட்டிருந்தன.

பலவிதமான பழங்கள்
அடுக்கடுக்காய் வைத்து அழகுபட இருந்தன.
டிங்குவும் பிங்குவும் வேடிக்கை பார்த்தன.
மங்குக் கரடி சத்தான உணவுப் பொருட்களை
வாங்கிக் கூடையை நிரப்பியது.

## வகைப்படுத்துவோம்.

❖ உணவுப் பொருட்களைத் தகுந்த கூடையில் சேர்ப்போம்.

ஆரோக்கியமான உணவுகள்




ஆரோக்கியமற்ற உணவுகள்









## பழங்கள்.... பழங்கள்....

❖ உங்களுக்கு எத்தனைப் பழங்களின் பெயர்கள் தெரியும்?

❖ உங்களுக்குப் பிடித்த பழம் எது? ஏன்?

## பெயர் எழுதுங்கள்.









## நிரப்புங்கள்.

- .................................... வாழைப்பழங்கள்
- .................................... கீரைகள்.
- .................................... முட்டைகள்.
- .................................... காய்கறிகள்.

( கட்டுக் கட்டாய், குவியல் குவியலாக, தட்டுத்தட்டாய், குலை குலையாய் )

## வாக்கியம் அமைப்போம்.

| | | |
|---|---|---|
| நான்<br>எனக்கு | ஆப்பிள்<br>முட்டை<br>கீரை | வாங்கினேன்<br>பிடிக்கும் |

- நான் ஆப்பிள் வாங்கினேன்.
- ....................................
- ....................................
- ....................................
- ....................................
- ....................................

**கதை நேரம்...**

# ஏமாந்த பூனைகள்



1



2



3



4




5



6

கிழிந்த சின்னக் காகிதம்
கிடக்கு இங்கு தரையிலே
கிட்டு நீயும் எடுப்பாய்
எட்டி உள்ள கூடையில்
கிட்ட வந்து போடுவாய்
சுத்தம் நீயும் காப்பாய்!

❖ உங்களுக்குப் பிடித்த உணவுப் பொருட்களைக் கட்டங்களில் எழுதுங்கள்.



அலகு 5

# பயணம் இனிது

## வாகனங்கள் பலவிதம்

சோலை வனத்தில் கலைவிழா. அனைத்து விலங்குகளும் பலவித வாகனங்களில் ஏறி கலைவிழாவைக் காணப் புறப்பட்டன.



சோலையிலே கலை விழா
சின்னக் குயில் பாடுது
வண்ண மயில் ஆடுது
நாமும் சேர்ந்து ரசிக்கலாம்.

குட்டி பைக்கில் ஏறியே
சுட்டிக் குரங்கு வந்தது.
சிட்டுப் போன்ற விமானத்தில்
சிங்க ராஜா வந்தது.

பெட்டி போன்ற இரயிலிலே
குட்டி விலங்குகள் வந்தன
கடலும் தாண்டி விலங்குகள்
கப்பல் ஏறி வந்தன.

காடு முழுதும் விலங்குகள்
காட்சி கண்டு மகிழுதே!
அனைவரும் ஒன்று கூடியே
ஆடிப்பாடி மகிழலாம்!



**வட்டமிடுங்கள்.**

❖ பாடப்பகுதியிலிருந்து கீழ்வரும் சொற்களை வட்டமிடுங்கள்.

**குயில், குரங்கு**

**படமும் சொல்லும்.**



குரங்கு




குடை



குயில்

**அடிக்கோடிட்ட எழுத்தை வாசியுங்கள்.**

<u>கு</u>ட்டிக் <u>கு</u>ரங்<u>கு</u>



**சொல்லுங்கள்.**

❖ உங்களுக்குத் தெரிந்த வாகனங்களின் பெயர்களைக் கூறுங்கள்?

❖ நீங்கள் கூறிய எத்தனை வாகனங்கள் பாடப்பகுதியில் வந்துள்ளன?

❖ உங்களுக்குப் பிடித்த வாகனம் எது? ஏன்?


**நான் யார்? பொருத்தமான விடையை இணையுங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 | அழுத்தி அழுத்தி மிதித்தால்<br>அலறித் துடித்து ஓடும் | இரயில் வண்டி |
| 2 | உயிர் இல்லாத பறவை<br>ஊர் ஊராய்ப் போய்ச் சேரும் | படகு |
| 3 | ஊளையிடும் வண்டி<br>ஊரைச் சுமக்கும் வண்டி | சைக்கிள் |
| 4 | கை இல்லாமல் நீந்துவான்<br>கால் இல்லாமல் ஓடுவான் | விமானம் |


## வகைப்படுத்துங்கள்.

❖ படங்களைப் பாருங்கள்.

பயன்களின் அடிப்படையில் வகைப்படுத்துங்கள். பயணம் செய்ய, பொருட்களை ஏற்றிச் செல்ல, ஆபத்திற்கு உதவும் வண்டிகள்.








| வாகனத்தின் பெயர் | பயன்பாடு |
|---|---|
| | |







## மாதிரியைப் போன்று மாற்றி எழுதுங்கள்.

மயில் வந்தது; குயில் வந்தது.

மயிலும் குயிலும் வந்தன.

காகம் வந்தது; குருவி வந்தது.

...............................

சிங்கம் ........... ; புலி ...........

...............................

## எனக்குப் பிடித்த வாகனம் – படம் வரைந்து வண்ணம் தீட்டுவேன்.

# தலைக்கவசம் உயிர்க்கவசம்

கலை விழா முடிந்து திரும்பும் வழியில் ஒரு விபத்து நடந்தது. சுட்டிக் குரங்கின் பைக் குள்ள நரியின் காரில் மோதியது. காவல் அதிகாரி வந்தார். விசாரித்தார்.










ஐயா! சுட்டிக் குரங்கு எப்பொழுதும் இப்படித்தான் சாலையில் வலது பக்கமே வாகனத்தை ஓட்டுவான். தலைக்கவசமும் அணிய மாட்டான்.
அப்படியா...


தலைக்கவசம் அணியாமல் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத உனக்குச் சரியான தண்டனை உண்டு.
ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் நான் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பேன்

படத்தைப் பாருங்கள்; உரையாடுங்கள்.







பாடப்பகுதியில் ஐயா என்ற சொல்லை வட்டமிடுங்கள். எழுதுங்கள்.

❖ ______________________

சொற்கள் உருவாக்குவோம்.




______ ______ ______ ______ ______

'ன், டு' என்ற எழுத்துகளில் முடியும் சொற்கள் உருவாக்குவோம்.


| | | |
|---|---|---|
| நா → | ன் | நான் |
| தே → | ன் | தேன் |
| வா → | ன் | வான் |
| ______ → | ன் | ______ |
| ______ → | ன் | ______ |
| ______ → | ன் | ______ |

| | | |
|---|---|---|
| நா → | டு | நாடு |
| தே → | டு | தேடு |
| கா → | டு | காடு |
| ______ → | டு | ______ |
| ______ → | டு | ______ |
| ______ → | டு | ______ |


## சரியா? தவறா?

படங்களைப் பாருங்கள். சரியானவற்றிற்கு (✓) அடையாளமும் தவறானவற்றிற்கு (✗) அடையாளமும் இடுக.











## பாடுவோமா!

செந்தில் மாமா வந்தாரு
பந்து வாங்கி வந்தாரு
சாந்தி அக்கா வந்தாங்க
பூந்தி வாங்கித் தந்தாங்க

## வாசிப்போம்/ எழுதுவோம்

மருந்து – விருந்து
மந்திரம் – தந்திரம்
பந்தல் – கந்தல்



# வாருங்கள் போகலாம்

பல்வேறு இடங்களிலிருந்து வந்த காட்டு விலங்குகள் சோலை வனத்தைச் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டன. சோலையிலுள்ள வன–விலங்குகள் அவைகளுக்கு உதவி செய்தன.



அணில் மிதிவண்டியில் வந்தது.
ஒருவர் என்னுடன் வரலாம் என்று அழைத்தது.
அழைத்ததற்கு நன்றி நாங்கள் ஒன்றாகச் செல்ல
ஆசைப்படுகிறோம் என்றன விலங்குகள்.

சுட்டிக் குரங்கு மோட்டார் பைக்கில் வந்தது.
என்னுடன் வருவது யார்?
நான் கூட்டிச் செல்வேன் என்றது.
இல்லை... இல்லை...
நாங்கள் ஒன்றாகச் செல்ல ஆசைப்படுகிறோம் என்றன.

கரடி மாமா பேருந்தில் வந்தது.
வாருங்கள் என்னுடன்.
அனைவரையும் ஏற்றிச் செல்வேன் என்றது.
அனைத்து விலங்குகளும் பேருந்தில் ஏறின.
சோலைவனக் காட்டைச் சுற்றிப் பார்த்தன.



ST-339-10-TAMIL-1-VOL-1

## உரையாடுங்கள்.

- நீங்கள் உல்லாசப் பயணம் சென்றதுண்டா?
- எந்தெந்த வாகனங்களில் நீங்கள் பயணம் செய்துள்ளீர்கள்?
- கடல் வழியாகப் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர்?
- நீங்கள் விமானத்தில் ஏறியதுண்டா?

## எனது பயணம்.

- நீங்கள் செய்த பயண அனுபவத்தைக் கூறுங்கள்.

## வாகனங்களை வகைப்படுத்துங்கள்.

| நிலம் | நீர் | வானம்/வான்வெளி |
|---|---|---|
| | | |

## இணைப்போம்.

- நிற்குமிடம் எங்கே?



பேருந்து நிலையம்



துறைமுகம்




விமான நிலையம்



இரயில் நிலையம்

## நானும் நாங்களும்.

| | | |
|---|---|---|
| அணில் | – | அணில்கள் |
| குரங்கு | – | |
| விலங்கு | – | |
| வாகனம் | – | |
| நான் | – | |

## வாகனப் படத்தொகுப்பு தயாரிப்போம்.

❖ பலதரப்பட்ட வாகனங்களின் படங்களைச் சேகரித்து வாகனப் படத்தொகுப்பு தயாரியுங்கள்.

## சொற்புதிர்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ④ |
| | | | | | | வி |
| | | | | ③ | | |
| | | | | ச | | |
| | | ② | அ | | | ம் |
| | | | | | | |
| ① | மி | | | ல் | | |

1. இடியுடன் சேர்ந்து வருவது.
2. இது ஒரு பறவை.
3. இது இல்லாத வீடு இல்லை.
4. இது ஒரு வாகனம்.

## எங்கே செல்லலாம்?

சைக்கிள் ஏறிக் கொள்ளலாம்
சைதாப்பேட்டை செல்லலாம்



காரில் ஏறிக் கொள்ளலாம்
காரைக்குடி போகலாம்.

ரயிலில் ஏறிக் கொள்ளலாம்
ராமேஸ்வரம் செல்லலாம்.



கப்பல் ஏறிக் கொள்ளலாம்
கல்கத்தாவை அடையலாம்

பறவைக் கப்பல் ஏறலாம்
பாரிஸ் நகரம் போகலாம்




மனோ ரதத்தில் ஏறலாம்
வையமெல்லாம் சுற்றலாம்

– குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா





## கதை நேரம்... ஏமாந்த கழுதை



சின்னச் சின்ன மோட்டார்
சிங்கார மோட்டார்
சின்னச் சின்ன மோட்டார்
சிட்டாகப் பறக்கும் மோட்டார்.

ஊரைச் சுற்றிப் பார்க்க
தேவை ஒரு மோட்டார்.
நாலு சக்கர மோட்டார்
நாங்கள் ஏறும் மோட்டார்.

பாம் பாம் மோட்டார்
பாய்ந்து செல்லும் மோட்டார்.
சின்னச் சின்ன மோட்டார்
சிங்கார மோட்டார்.

வெயிலில் ஓடும் மோட்டார்
மழையில் ஓடும் மோட்டார்
பாதுகாக்கும் மோட்டார்
கூட இருக்கும் மோட்டார்.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

***Online R. T. E Monitoring : www.nireekshana.org.in***